### நடப்பாண்டில் அறிமுகமாகிறது!

# 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு புதிய 'நீட்' நுழைவுத் தேர்வு!

### சமஸ்கிருதத்தைத் திணிக்க ஒன்றிய அரசு திட்டம்!

புதுடெல்லி,ஜூலை 15- நாடு முழுவதும் நீட் தேர்வு முறைகேடுகள் மற்றும் வினாத்தாள் கசிவு விவகாரங்கள் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் 10 - ம் வகுப்பு மாணவர்களுக்கு புதிய நீட் நுழைவுத்தேர்வு நடத்தப்படும் என ஒன்றிய சமஸ்கிருதப் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

புதுடெல்லியில் உள்ள மத்திய சமஸ்கிருதப் பல்கலைக்கழகம் மற்றும் இந்திய மருத்துவ முறைக்கான தேசிய ஆணையம் இணைந்து, பத்தாம் வகுப்பு முடித்த மாணவர்களுக்காக நீட் - ப்ரீ ஆயுர்வேதா என்ற புதிய நுழைவுத் தேர்வை அறிமுகம் செய்து அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்படி, தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள் முதலில் இரண்டு ஆண்டுகள் 'ப்ரீ-ஆயுர்வேதா' என்ற அடிப்படைப் படிப்பைப் பயில்வார்கள். இது மேல்நிலைக் கல்விக்கு இணையானதாகக் கருதப்படும். அதனைத் தொடர்ந்து நான்கரை ஆண்டுகள் பி.ஏ.எம்.எஸ் மருத்துவப் படிப்பும், இறுதியாக ஒரு ஆண்டு கால மருத்துவமனைப் பயிற்சியும் என மொத்தம் ஏழரை ஆண்டுகளில் மாணவர்கள் ஆயுர்வேத மருத்துவர் பட்டத்தைப் பெற முடியும். இதற்காக நடத்தப்படும் 'நேஷனல் எலிஜிபிலிட்டி-கம்-என்ட்ரன்ஸ் டெஸ்ட் - ப்ரீ-ஆயுர்வேதா' என்ற நுழைவுத் தேர்வில் பங்கேற்க, அங்கீகரிக்கப்பட்ட கல்வி வாரியத்தில் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருப்பது அவசியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிளஸ் 2 முடித்த பிறகு நடத்தப்படும் நுழைவுத் தேர்வே இவ்வளவு பாதிப்புகளை ஏற்படுத்தும் போது,

தற்போது 10ம் வகுப்பு மாணவர்களையும் இத்தகைய போட்டித் தேர்வு முறைக்குள் தள்ளுவது மாணவர்களின் எதிர்காலத்தை சிதைக்கும் செயல் எனப் பெற்றோர்கள் அஞ்சுகின்றனர். இந்தத் திட்டத்தில் மற்றுமொரு சர்ச்சையாக, சமஸ்கிருதம் பயில்பவர்களுக்கு மட்டுமே இத்தகைய வாய்ப்புகள் கிடைக்கும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

இது மறைமுகமாகச் சமஸ்கிருத மொழியைத் திணிக்கும் முயற்சி என்றும், இதன் மூலம் கிராமப்புற மற்றும் அரசுப்பள்ளி மாணவர்களின் மருத்துவக் கனவு அடியோடு பறிக்கப்படும் என்றும் சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

### முத்தமிழ் அறிஞர் கலைஞரின் உற்ற நண்பர் — மறைந்த

# திருவாரூர் கு.தென்னன் மகன் கு.தெ.முத்து மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!



*திருவாரூர், ஜூலை 15- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நெருங்கிய நண்பரும், திருவாரூர் நகர் மன்ற முன்னாள் தலைவருமான கு.தென்னன் அவர்களின் மகன் கு.தெ.முத்து அவர்கள் உடல்நலக்குறைவால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு வயது 68.*

*மறைந்த கு.தெ.முத்து அவர்களுக்கு உஷா என்கிற மனைவியும், கண்மணி என்கிற மகளும், கலைமணி என்கிற மகளும் உள்ளனர். இவரது சகோதரர் கு.தெ.சம்பத் திருவாரூர் நகர்மன்ற நியமன உறுப்பினர் ஆவார்.*

*சிறந்த கழக கொள்கை விளக்கப் பேச்சாளரான கு.தெ.முத்து அவர்கள் திருவாரூர் நகர இளைஞரணி அமைப்பாளராகவும், திருவாரூர் நகர திமுக அமைப்பாளராகவும், மாநில திமுக பொதுக்குழு உறுப்பினராகவும், 1996-2001ல் திருவாரூர் நகர் மன்ற துணைத் தலைவராகவும் பொறுப்பேற்று திறம்பட செயல்பட்டவர். தற்போது மாநில விவசாய தொழிலாளர் அணி துணைசெயலாளராக பொறுப்பினை வகித்து வந்தவர். கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றவர்.*

*கு.தெ.முத்து அவர்களின் மறைவின் தகவல் அறிந்த மாவட்டக்கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.,மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், மாநில விவசாய தொழிலாளர் அணி தலைவர் உ.மதிவாணன், நகர செயலாளர் வாரை. எஸ்.பிரகாஷ், ஒன்றிய செயலாளர் புலிவலம் ஏ. தேவா மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய,நகர, பேரூர் செயலாளர்கள் பிரிவால் வாடும் அவரது கும்பத்தினருக்கு தங்களது இரங்கலை தெரிவித்து வருகின்றனர்.*

*மறைந்த கு.தெ.முத்து அவர்களின் இறுதி ஊர்வலம் நேற்று 14.07.2026. செவ்வாய் மாலை 3.00 மணிக்கு திருவாரூர் அய்யனார் கோயில்தெரு அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப் பட்டது.*

### தலைவர் கலைஞரின் ஆருயிர் நண்பர்

# திருவாரூர் கு.தென்னன் மகன் கு.தெ.முத்து மறைவு!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 15- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

தலைவர் கலைஞர் அவர்களின் ஆருயிர் நண்பரும் திருவாரூர் நகர் மன்ற முன்னாள் தலைவருமான கு.தென்னன் அவர்களின் மகன் கு.தெ.முத்து அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த வேதனையடைந்தேன்.

சிறந்த பேச்சாளரான கு.தெ.முத்து அவர்கள் திருவாரூர் நகர இளைஞரணி அமைப்பாளர், திருவாரூர் நகர தி.மு.க. செயலாளர், மாநில தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் எனக் கழகத்தில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றியுள்ளார். 1996 2001இல் திருவாரூர் நகர் மன்ற துணைத் தலைவராக மக்கள் பணியிலும் திறம்பட செயல்பட்டிருக்கிறார்.

தன் தந்தையைப் போலவே கழகத்தின் மீதும் எங்கள் குடும்பத்தின் மீதும் அளவுகடந்த பற்று கொண்டவராக முத்து அவர்கள் திகழ்ந்தார். கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்துகொண்டு பல முறை சிறை சென்றுள்ளார்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் திருவாரூர் மாவட்டக் கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### சிங்கம்புணரியில் முன்னாள் அமைச்சர்

# செ.மாதவன் பிறந்தநாள் விழா - கால்பந்தாட்ட இறுதிப் போட்டி!




*சிங்கம்புணரி, ஜூலை 15- சிங்கம்புணரியில் முன்னாள் அமைச்சர் செ.மாதவன் 93 வது பிறந்த நாளை முன்னிட்டு மாதவன் கால்பந்து கழகம் சார்பாக பாரிவள்ளல் பள்ளியில் 17 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் கலந்து கொள்ளும் 6ம் ஆண்டு மாநில அளவிலான கால் பந்தாட்டப் போட்டி 10 ம் தேதி தொடங்கியது.*

*விழாவிற்கு பள்ளித் தலைவர் வெற்றிச்செல்வி ராஜமாணிக்கம் தலைமை வகித்தார்.*

*பள்ளித் தாளாளர் அருளாளன், உமா அருளாளன் சாந்தி செழியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*பள்ளி முதல்வர் சியாம் பிராங்க்ளின் டேவிட் வரவேற்றார். காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக டீன் மாணிக்கவாசகம் போட்டியை தொடங்கி வைத்தார்.*

*இறுதிப் போட்டி 12.07.2026 - ஞாயிற்றுக் கிழமை அன்று நடைபெற்றது.*

*அழகப்பா பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் சுப்பையா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.*

*முன்னாள் எம்.எல்.ஏ. அருணகிரி, பேரூராட்சி தலைவர் அம்பலமுத்து, துணைத் தலைவர் இந்தியன் செந்தில் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சுழற் கோப்பைகள் வழங்கப் பட்டது.*

*இப்போட்டியில் பல் வேறு மாவட்டங்களில் இருந்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளை அணிகள் கலந்து கொண்டனர்.*

*இதில் தொழிலதிபர் ஆர்.எம்.எஸ்.சரவணன், ஒன்றியச் செயலாளர் பூமிநாதன், நகரச் செயலாளர் கதிர்வேல், நகர அவைத் தலைவர் சிவக்குமார், ஒன்றிய இளைரணி மனோகரன் பொதுக்குழு உறுப்பினர் சோமசுந்தரம், தொழிலதிபர் கணேசன், ஆசிரியர் சுப்பிரமணியன், மேலாளர்கள் கிருஷ்ணன், சரவணன் மற்றும் கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

*நிகழ்ச்சி ஏற்பாடுகளை பெற்றோர் ஆசிரியர் மாணவர் மாணவியர் தலைவர் டாக்டர் ராஜ் குமார் உடற்கல்வி ஆசிரியர்கள் மணிமேகலை சின்னையா, சரண்யா பள்ளி ஆசிரியக்கள் நிர்வாகத்தினர் மாணவர்கள் கலந்து செய்தனர்.*

### மனுக்கள் தர முடியாமல்

# மாற்றுத்திறனாளிகள் அவதி!

## தலைமைச் செயலகத்தில் அனுமதி மறுப்பு!

*சென்னை,ஜூலை 15- கோரிக்கை மனு அளிக்க வந்த மாற்றுத்திறனாளிகளை தலைமைச் செயலகத்துக்குள் அனுமதிக்காமல் தவெக அரசு அவர்களை அவமதித்துள்ளது. இதனால் மாற்றுத்திறனாளிகள் கடும் அவதியும், வேதனையும் அடைந்தனர்.*

*கோரிக்கை மனு அளிப்பதற்காக தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து தலைமைசெயலகத்திற்கு மாற்றுத்திறனாளிகள் வருகை வந்தனர். ஆனால் பல காரணங்களை சொல்லி அவர்களை காவல்துறையினரும், அதிகாரிகளும் உள்ளே அனுமதிக்கவில்லை. மேலும் அவர்களின் கோரிக்கைகளை கேட்க அதிகாரிகள் திட்டவட்டமாக மறுப்பு தெரிவித்துவிட்டனர். இதனால் மாற்றுத்திறனாளிகள் விரக்தியும், ஏமாற்றமும் அடைந்தனர்.*

*த.வெ.க. அரசின் செயல்பாட்டால் மாற்றுத்திறனாளிகள் கடும் அவதியும், வேதனையும் அடைந்தனர். வாக்குறுதிகளையும் நிறைவேற்றாமல், கோரிக்கைகளையும் கேட்க தயாராக இல்லாமல் அலட்சியமாக செயல்படும் விஜய் அரசுக்கு மாற்றுத்திறனாளிகள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.*

*இந்நிலையில், முதலமைச்சர் தனிபிரிவுக்கு வரும் பொதுமக்கள் அடிப்படை வசதிகளின்றி சாலையில் நீண்ட தூரம் காத்திருக்கும் அவலமும் நிலவி வருகிறது.*

# மேகதாது அணையைத் தடுப்பதற்குரிய ஒரே தலைவர் மு.க.ஸ்டாலின்தான்!



**நேற்றைய தொடர்ச்சி**

அளவு மேகதாது அணையின் சேமிப்புத் திறனை விட முப்பது மடங்கு அதிகம்.

கர்நாடகாவின் தற்போதைய 6.7 கோடி மக்களுக்காகப் பயன்படுத்தப்படாமல் கடலுக்குச் செல்லும் இந்த 2,000 டிஎம்சி நீர் - ஒருவருக்கு தினமும் 135 லிட்டர் குடிநீர் தேவையாகக் கணக்கிட்டால் - சுமார் 17 ஆண்டுகள் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியது. இதே நோக்கத்திற்காக மேகதாது அணையைக் கட்டுவதற்குப் பதிலாக, இந்நீரில் ஒரு பகுதியை யாவது மாநிலக் குடிநீர்ப் பயன்பாட்டிற்காக, பெங்களூரு நகரத்தையும் சேர்த்து, பயன்படுத்த முடியாதா?

ஒரு டிஎம்சி நீரின் நெல் உற்பத்தி மதிப்பு 50 கோடி ரூபாய் என எடுத்துக்கொண்டால், 2,000 டிஎம்சி நீரின் பொருளாதார மதிப்பு 100,000 கோடி ரூபாய். இந்தியா சுதந்திரம் பெற்றதிலிருந்து 78 ஆண்டுகள் கடந்தும், அதிக அளவிலான நீர் கர்நாடகாவில் கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்படுகிறது. இந்தியா முழுவதும் ஆண்டுதோறும் 80-85 விழுக்காடு மேற்பரப்பு நீர் கடலுக்குச் செல்லும் நிலை தொடர்கிறது. இதே நேரத்தில், பயிர்ப் பருவத்தில் நீர் கிடைக்காததால், இந்திய நாட்டில் ஒவ்வொரு 30 முதல் 32 நிமிடங்களுக்கு ஒரு விவசாயி தற்கொலை செய்கிறார் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

**மேகதாது (Mekedatu) அணையைக் கட்டுவதை பிற மூன்று மாநிலங்களும் கடுமையாக எதிர்க்கின்றன!**

காவிரி ஆற்றின் நீரை நான்கு மாநிலங்களான தமிழ்நாடு 404.25 டிஎம்சி (TMC), கர்நாடகம்: 284.75 டிஎம்சி, கேரளா: 30 டிஎம்சி, புதுச் சேரி: 7 டிஎம்சி என பிரித்துக் கொள்கின்றன. மேற்படி ஒதுக்கீட்டின்படி, கர்நாடக மாநிலம் ஆண்டுதோறும் பிலிகுண்டுலு (Biligundlu) நீர் அளவீட்டு மையத்தின் வழியாகத் தமிழ்நாட்டிற்கு 177.25 டிஎம்சி நீரைத் திறந்துவிட வேண்டும். இந்நீர்ப் பகிர்வு, மற்றும் கண்காணிப்புப் பணிகளைக் காவிரி மேலாண்மை ஆணையம் (CWMA) மேற்கொண்டு வருகிறது. மேகதாது அணையைக் கட்டுவதற்குத் தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளம் மூன்று மாநிலங்களும் கடுமையாக எதிர்க்கின்றன. இச்செய்தி, இந்திய அரசிற்கும், உச்சநீதி மன்றத்திற்கும், காவிரி மேலாண்மை வாரியத்திற்கும் நன்றாகத் தெரியும். இதை அறிந்த இம்மூன்று அமைப்புகளின் இன்றைய நிலைப்பாடு, உச்சநீதி மன்றத் தீர்ப்பில் கண்டிப்பாகப் பிரதிபலிக்கும்.

காவிரிப்படுகை விவசாயத்திற்காக, மழைநீர் மற்றும் நிலத்தடி நீருடன் மேட்டூர் அணையின் நீரும் பயன்படுத்தப்படுகிறது. காவிரித் தீர்ப்பாயத்தின், முதல் விருதில் கர்நாடகாவிலிருந்து 205 டிஎம்சி நீர் ஒதுக்கப்பட்டது; இரண்டாவது விருதில் அது 192 டிஎம்சியாகக் குறைக்கப்பட்டது. பின்னர் 2018 பிப்ரவரி 16 ஆம் தேதியிட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் படி, கர்நாடகா 177.25 டிஎம்சி நீரையே வழங்க வேண்டும் எனத் தெரிவித்தது. இதனால் தமிழகம் இழந்த காவிரி நீர் முறையே, 13 டிஎம்சி 14.75 டிஎம்சி, கூடுதல் 27.75 டிஎம்சி. இவ்வாறு தமிழ்நாடு தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் 27.75 டிஎம்சி நீரை இழக்கிறது. இதனால் தமிழகம் ஆண்டுதோறும், நெல் சாகுபடியில் ரூ. 1387.5 கோடி அளவில் வருமானத்தை இழக்கிறது.

பெங்களூரு மாநகரின் முழுமையான குடிநீர் மற்றும் இல்லத் தேவைகளுக்காக, காவிரி நதித் தீர்ப்பாயம் இதற்கு முன்பு தமிழ்நாட்டிற்கு வழங்கிய 192 டிஎம்சி நீரிலிருந்து 14.75 டிஎம்சி நீரைக் குறைத்து, 177.25 டிஎம்சி நீரையே இந்திய உயர் நீதிமன்றம் 16.2.2018 அன்று வழங்கிய உத்தரவின் படி வழங்குகிறது. எனவே பெங்களூரு மாநகரின் குடிநீருக்காக மேகதாது அணை கட்டப்படுகிறது என கர்நாடகா அரசு தெரிவிப்பதை ஏற்க இயலாது. தமிழகத்திற்கு இது ஒரு தொடர் நீரிழப்பு.

கடந்த 2023-2024ஆம் நீர் ஆண்டு, மிகக் கடுமையான வறட்சி ஆண்டை (Distress Year) தமிழகம் சந்தித்தபோது, கர்நாடகா தமிழகத்திற்குத் தர வேண்டிய பங்கில், சுமார் 50 முதல் 60 டிஎம்சி வரை தண்ணீர்ப் பற்றாக்குறைப் பெற, தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டது. நீர் கிடைக்காததால் மேட்டூர் அணை வறண்டு, டெல்டாவில் லட்சக்கணக்கான ஏக்கர் குறுவை மற்றும் சம்பா பயிர்கள் கருகின. இந்த ஆண்டு மட்டும் 50 முதல் 60 டிஎம்சி நீரை தமிழகம் இழந்தது. இவ்வாறு தமிழகம் பல ஆண்டுகளில் தனக்குக் கிடைக்க வேண்டிய நீரை இழக்கிறது.

ஒன்றிய அரசும் உச்சநீதிமன்றமும் இந்த உண்மைகளை உணர்ந்து, நேர்மையாக நடக்கும் தமிழக அரசுக்கு உரிய நீரை, கர்நாடக மாநிலம் இனியாவது வழங்கத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நடவடிக்கை எடுப்பினும், கர்நாடக மாநிலம் நீரை வழங்குமா?

**ஒரு முறையாவது தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நீரை கர்நாடக மாநிலம் விரும்பி வழங்கியதா?**

காவிரி நதிநீர்ப் பங்கீட்டில், கர்நாடக அரசு தமிழகத்திற்கு வழங்க வேண்டிய நீரைத் தன்னார்வத்துடனோ, முழு மனதுடனோ இதுவரை ஒரு தடவை கூட வழங்கியதில்லை. பெரும்பாலான காலங்களில், அணைகளில் உபரி நீர் (Flood) வெளியேறும் போது, அங்குள்ள கே.ஆர்.எஸ், கபினி போன்ற அணைகளைப் பாதுகாக்கும் நோக்கில், மட்டுமே தமிழகத்திற்குத் தண்ணீர் சென்றடைந்துள்ளது. மற்ற நேரங்களில், தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தை அணுகிச் சட்டப் போராட்டம் நடத்தியும், காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுகளுக்குப் பிறகு, வேண்டா வெறுப்பாக மட்டுமே கர்நாடகம் தண்ணீர் திறந்துவிட்டுள்ளது. கர்நாடகத்தின் நிலையான நிலைப்பாடு என்னவெனில்: தமிழகத்தில் மழை குறைவாக உள்ள, வறட்சி காலங்களில், தமிழகத்திற்குத் தண்ணீர் திறக்கக் கர்நாடகத்தில் உள்ள அரசியல் கட்சிகளும் விவசாயிகளும் கடும் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள். சட்டப் போராட்டம்: உச்ச நீதிமன்றம் உத்தரவிடும் வரை அல்லது மேலாண்மை ஆணையம் கட்டாயப்படுத்தும் வரை, கர்நாடகம் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து தமிழகத்திற்குரிய நீரைத் தடுத்து வருகிறது. இக் காரணங்களால், ஒவ்வொரு ஆண்டும் ஜூன் அல்லது ஜூலை மாதங்களில் வழக்கமான நீர்ப் பங்கீட்டைப் பெற, தமிழகம் மன்றாட வேண்டிய சூழல் உள்ளது.

டெல்லியில் 23.6.2026 அன்று நடைபெற்ற காவிரி மேலாண்மை ஆணையத்தின் 52ஆவது கூட்டத்தில், ஜூன் 9.19 டிஎம்சி, ஜூலை மாதத்திற்கு 31.24 டிஎம்சி மொத்தமாக 40 டிஎம்சி காவிரி நீர் தேவை என தமிழக அரசு வலியுறுத்தியது. கோடை காலங்களில் அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிக நீரை கர்நாடகா பயன்படுத்திவிட்டு, நீர்த்தேக்கங்களில் குறைந்த அளவே நீர் இருப்பதாகக் கூறுவதை ஏற்க முடியாது எனவும் தமிழக உறுப்பினர்கள் மேலாண்மை வாரியத்தில் தெரிவித்தார்கள். மேலாண்மை வாரியம், அடுத்த முறை இதைப் பற்றிப் பேசுவோம் என கூட்டத்தை முடித்தது. தற்பொழுது 30.06.2026 அன்று கர்நாடக நீர் துறை அமைச்சர், தமிழகத்திற்கு தண்ணீர் தர இயலாது என திட்டமிட்டமாகத் தெரிவித்தார்.

தனி மனிதன், சட்டத்திற்குப் புறம்பாக நடப்பின், அம் மனிதனைத் திருத்த இயலும். ஆனால், ஒரு அரசே சட்டத்திற்குப் புறம்பாகத் தொடர்ந்து தமிழகத்திற்கு உரிய நீரை வழங்காது இருப்பின், இந்த மாநிலத்தை எப்படித் திருத்துவது? யார் திருத்துவது?

காவிரி மேலாண்மை வாரியத்திற்கு முடிவெடுக்கும் முழு அதிகாரமும் இல்லை. இந்த வாரியம் பல் பிடுங்கப்பட்ட வாரியம். எனவே, ஒன்றிய அரசும், ஒன்றிய நீர்வளத் துறையும் என்ன சொல்லுகிறதோ அதன்படியே இயங்குகிறது. இந்த நிலை நீடிக்கும் வரை இதனால் நடுநிலைமையுடன் இயங்கப் பெரும்பாலும் வாய்ப்பு இல்லை என்பதே உண்மை. இச்சூழலில், மேகதாது அணை கர்நாடக மாநிலத்தில் அமைப்பதை இந்த அமைப்பு தடுக்க வாய்ப்பே இல்லை..

**மேகதாது அணை அமைக்கப்பட்டால் கர்நாடகாவில் இருந்து ஒரு சொட்டு நீர் கூட தமிழகத்திற்குக் கிடைக்க வாய்ப்பிருக்கிறதா?**

தமிழகம் பெற வேண்டிய நீரை கர்நாடகா அரசு தடுத்தால் காவிரிப்படுகை சந்தித்த மேலும் சந்திக்க இருக்கும் இன்னல்கள் யாவை?

தமிழகம் பெற வேண்டிய நீரை கர்நாடக அரசு தொடர்ந்து தடுத்தால், காவிரிப்படுகை பாலைவனமாகும், நெல் உற்பத்தி முடங்கும், தமிழக மக்கள் தொடர்ந்து உண்ணும் அரிசி உணவை இழக்கும் நிலை ஏற்படும்.

மக்கள் நீரின்றி பல கிலோமீட்டர் தூரம் சென்று, தரமற்ற நீரைத் தலையில் சுமந்து, அதைத் தாகத்தைத் தவிர்ப்பதற்காகப் பருகியதால், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவு, இந்த ஆண்டில் டெங்கு வியாதி பெரும்பாலான மக்களைத் தொற்றி இறந்தனர். மேகதாது அணை கட்டப்பட்ட பிறகு இவை போன்ற தொடர் நிகழ்வுகள் காவிரிப் படுகையில் இனி வரும் ஆண்டுகளில், தொடர் நிகழ்வாகப் பல ஆண்டுகள் நிகழும். இதனால் காவிரிப்படுகை பாலைவனமாகும், தமிழக மக்கள் தொடர்ந்து உண்ணும் அரிசி உணவை இழக்க நேரிடும்.

**மேகதாது அணையைக் கட்டிய பிறகு தமிழக நெல் உற்பத்தியில் தலைமை வகிக்கும் காவிரிப்படுகை நிலை என்னவாகும்?**

கர்நாடகா மாநிலத்தில் மேகதாது அணை அமைக்கப் பட்டால், இம் மாநிலத்தில் இருந்து காவிரிப்படுகைக்கு இனி நீர் கிடைக்குமா? நீர் கிடைக்காவிட்டால் இங்கு நெல் உற்பத்தி தொடர்ந்து நிகழுமா? இதனால் தமிழக மக்கள் விவசாயம், குறிப்பாக நெல் உற்பத்தியில் பின் தங்க வேண்டிய நிலை ஏற்படும். தமிழகம் பிற மாநிலங்களில் இருந்து அரிசியை வாங்க வேண்டிய நிலை ஏற்படும். இந்நிகழ்வு ஒன்றிய அரசுக்குத் தெரியாதா?

**இந்தியாவில் இப்பொழுதுள்ள அரசியல் சூழலில் மேகதாது அணை கட்டப்படுவதற்கு அதிக வாய்ப்புகள் இருப்பதை தமிழக மக்கள் அறிவார்களா?**

பிஜேபி கட்சியைச் சார்ந்த கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த நீர் வளத்துறை துணை அமைச்சராக V. சோமன்னாவும், இம்மாநிலத்தைச் சேர்ந்த குமாரசாமி பாஜக அமைச்சரவையில் கனரகத் தொழில்கள் அமைச்சராகவும் ஒன்றிய அரசில் தற்பொழுது பணியாற்றுகின்றனர். காவிரி மேலாண்மை வாரியம், உச்ச நீதி மன்றம் போல், தனித்தியங்கும் அமைப்பு அல்ல (not an independent organization), இந்திய ஒன்றிய அரசின் கீழ் இயங்குகிறது. எனவே இந்த அமைப்பு, ஒன்றிய அரசின் கருத்துக்களைக் கேட்காமல் தானே எந்த முடிவையும் எடுக்க வாய்ப்புள்ளதா? இதன் பொருள் என்ன? சிந்திப்போம்!

தமிழகத்திற்குக் கிடைத்த 192 டிஎம்சி நீர், 177.25 டிஎம்சி ஆகக் குறைந்ததற்குக் காரணம், இந்திய அரசின் அரசிதழில் (Gazette) பதிவான பின்பும், ஒன்றிய அரசின் தலைமை, இத் திட்டத்தைப் பாராளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்பதனால், 14.75 டிஎம்சி காவிரி நீரை தொடர்ந்து இழக்க நேர்ந்தது என்பதை உலக மக்கள் அனைவரும் அறிவர்.

முனைவர்
**ப.மு. நடராசன்**
முன்னாள் இயக்குநர்
பருவக்கால மாற்ற ஆய்வு மையம்
பெரியார் மணியம்மைப் பல்கலைக் கழகம் – தஞ்சாவூர்
(இருப்பு – அமெரிக்கா)



இச்செயலில் தமிழக அரசு வெற்றி பெறவில்லை எனின், ஏற்கனவே தெரிவித்தது போல, மேகதாது அணை கட்டிய ஓரிரு ஆண்டுகளில், காவிரிப் படுகை பாலைவனமாக உருமாறும். இதனால் தமிழக நெல் உற்பத்தி குறையும். காவிரி நீரை நம்பி இருக்கும் விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்தை இழப்பர். இந்நிகழ்வு இத்துடன் முடிவதில்லை. காவிரிப் படுகை விவசாயிகள் 2016-2017 ஆம் ஆண்டில் தற்கொலை செய்து கொண்டது போல, இனி ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து நடக்க வாய்ப்பிருக்கிறது என்பதை நாம் யாரிடம் சொல்வது. தமிழக மக்கள் தமக்குத் தாமே திட்டமிட்டு இச்செயலை முறியடிக்க வேண்டும்.

**தமிழகத்திற்கு உரிய காவிரி நீரைப் பெறாமல் தமிழகம் 36 ஆண்டுகளாகத் தத்தளிப்பதற்குக் யார் காரணம்?**

நர்மதா நதிநீர்த் தீர்ப்பாயத்தின் (NARMADA WATER DISPUTES TRIBUNAL /NWDT) 1979 ஆம் ஆண்டு இறுதித் தீர்ப்பின்படி, குஜராத் மாநிலத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் 9 மில்லியன் ஏக்கர் அடி (Million Acre Feet) நீர் ஒதுக்கப்பட்டது, அதாவது 392 டிஎம்சி. இத் தீர்ப்பு இந்திய அரசாங்கத்தால் டிசம்பர் 1979ல் அதிகாரப்பூர்வ அரசிதழில் (Gazette) வெளியிடப்பட்டதில் இருந்து, கடந்த 46 ஆண்டுகளாக (1979 முதல் 2026 வரை) குஜராத் மாநிலம் இந் நதிநீர்ப் பகிர்வைப் பயன்படுத்தி வருகிறது. இந்நதிநீரை, குஜராத், மத்திய பிரதேசம் மகாராஷ்டிரா, ராஜஸ்தான் ஆகிய நான்கு மாநிலங்கள் பகிர்ந்து கொள்கின்றன.

இந்திய அரசு தனது அண்டை நாடுகளான பாகிஸ்தான், வங்கதேசம் மற்றும் நேபாளம் ஆகியவற்றுடன் நதிநீர் பகிர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. இதன்படி, 1960 ஆம் ஆண்டின் சிந்து நதிநீர் ஒப்பந்தத்தின் கீழ் சட்லெஜ், பியாஸ், ரவி நதிகள் இந்தியாவுக்கும், சிந்து, ஜீலம், செனாப் (Chenab) நதிகள் பாகிஸ்தானுக்கும் ஒதுக்கப்பட்டன. மேலும், 1996 ஆம் ஆண்டின் கங்கை நதிநீர் ஒப்பந்தத்தின் மூலம் ஃபராக்கா அணையில் (Farakka Barrage) இருந்து வங்கதேசத்துடன் கங்கை நதிநீர் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. அத்துடன், நேபாளத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ள கோசி, கண்டக் (Gandak River) மற்றும் மகாகாளி நதிகள் ஒப்பந்தங்கள் மூலம் பாசனம், மின் உற்பத்தி மற்றும் வெள்ளக் கட்டுப்பாட்டிற்காக இரு நாடுகளும் நதிநீரைப் பகிர்ந்து கொள்கின்றன.

மேலே தெரிவித்துள்ள நதிகள் நீர்ப் பங்கீட்டையும், காவிரி ஆற்றின் நீர்ப் பங்கீட்டையும் நடுநிலையுடன் ஒப்பிடின், சிக்கல் அனைத்தும் தொடர்ந்து கர்நாடக அரசாலே நிகழ்கிறது என்பதை, இந்திய மக்கள் அறிவர், இந்திய அரசு அறியுமா?. கர்நாடக அரசின் தவற்றை அறிந்து இனியாவது தமிழகத்திற்கு உரிய நீரைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் வழங்குவதற்கு ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா? நடவடிக்கை எடுப்பினும் கர்நாடக அரசு கட்டுப்படுமா?

காவிரி நீரைப் பிரித்து வழங்கும் காவிரி மேலாண்மை வாரியம், இந்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்காது, தனித்தியங்கும் நிறுவனமாக (Independent) இயங்க வேண்டும். காவிரி நீரைப் பகிரும் கர்நாடக மாநிலத்தின் அணைகளின் நீரின் அளவை இந்த அமைப்பே கண்காணித்து, ஒவ்வொரு மாதத்திற்கும் உரிய நீரைத் திறந்து விட வேண்டும். பிறகு அணையை இந்த நிறுவனமே மூட வேண்டும். அமெரிக்க நாட்டைப் போல ஒன்றிய அரசும், என்றும் நடுநிலமை வகிக்க வேண்டும். இம்முறை என்று நடைமுறைக்கு வருமோ, அன்றுதான், காவிரி நீரை ஒவ்வொரு மாநிலமும் தங்கு தடை இன்றிப் பெற்று, இனி என்றும் சிக்கலே இல்லாமல் நான்கு மாநிலங்களிலும் வாழும் மக்கள் ஒன்றுபட்டு உறவினர்களாக வாழ இயலும். இதுவே இக்கட்டுரையின் தலையான நோக்கம்.